**DEPOSITION OF WITNESS.**
**(Chapter XXIII, Cr.P.C)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, BODINAYAKANUR.**

**STC.No.321/2024**

**Deposition of PW–1**

| **Name** | : | திரு. ராமகிருஷ்ணன் | **Age** | : | 60/2026 |
|---|---|---|---|---|---|
| **Father's Name** | : | திரு. மருதமுத்து | **Religion** | : | இந்து |
| **Village** | : | மேலசொக்கநாதபுரம் | **Calling** | : | சுயதொழில் |
| **Taluk** | : | போடிநாயக்கனூர் | **Caste** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **31/07/2026.**

எதிரி ஆஜர். இருதரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்.

**சாட்சி மனு எண். 1313/2026ன் கீழ் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

2) நான் ஓட்டடல் தொழில் செய்து வருவதற்கு ஆதரவாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். Zomato நிறுவனத்திற்கும் எனது நிறுவனத்திற்கும் இடையே ஒப்பந்தம் உள்ளதா என்றால் உள்ளது. அந்த ஒப்பந்தத்தை இந்த வழக்கில் ஆவணமாக தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் உண்மையில் மேற்படி ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றும் அதை தாக்கல் செய்தால் அது எனக்கு எதிராக இருக்கும் என்பதால்தான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

3) எனக்கும் எதிரிக்கும் இடையே வரவு செலவு சம்பந்தமாக ஒப்பந்தம் இருந்ததா என்றால் இருந்தது. அந்த ஆவணத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். Zomato நிறுவனம் எனக்கு 12 லட்சம் ரூபாய் தர வேண்டும் என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான் அந்த பணத்தை Zomato நிறுவனம் தர வேண்டுமா என்றால் எதிரிதான் தரவேண்டும் எதிரிதான் அந்த

Zomato நிறுவனத்தின் ஜோனல் மேனேஜராக இருந்தார். 12 லட்சம் Zomato நிறுவனம் கொடுக்க வேண்டும் என்பதற்கு ஆதரவாக ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம்.

4) நான் Zomato நிறுவனத்தோடு 2022 ஆம் வருடம் முதல் வியாபாரம் செய்து வருகிறேன். எனது ஓட்டலில் இருந்து வாங்கப்படும் பொருள்களுக்கு எவ்வளவு நாளுக்கு ஒருமுறை பணம் எங்களது கணக்கில் வரவு வைக்கப்படும் என்றால் வாராவாரம் வரவு வைக்கப்படும். வாரத்திற்கு ஒருமுறை வரும் எந்த கிழமை என ஞாபகம் இல்லை. வரவு செலவில் குறைபாடு உள்ளது என்பதற்கு நான் ஏதாவது நடவடிக்கை எடுத்தேனா என்றால் ஜோனல் மேனேஜர் உள்ளிட்ட நபர்கள் வருவார்கள் அடுத்த மாதத்தில் சரியாகிவிடும் அடுத்த மாதத்தில் சரியாகிவிடும் எனச் சொல்லிச் செல்வார்கள் அவ்வாறுதான் இவ்வளவு பணம் கொடுக்க வேண்டியது ஏற்பட்டது.

5) இணையதளம் வாயிலாக உணவு வாங்கும் நிறுவனத்திற்கும் எங்களது ஹோட்டலுக்கும் உள்ள பண பரிவர்த்தனை அனைத்தும் இணையதளம் வாயிலாகதான் இருக்கும் என்றால் சரிதான். எங்களது வங்கி கணக்கிற்கு Zomato கம்பெனியின் வங்கி கணக்கில் இருந்துதான் பணம் வந்தது. எந்த இணையதளத்தில் இருந்து எங்களுக்கு ஆர்டர் கொடுப்பார்களோ அந்த இணையதளத்தில் இருந்து பணம் வரும். உணவு ஆர்டர் கொடுப்பது டெலிவரி எடுப்பது பணம் பரிவர்த்தனை செய்வது அனைத்தும் இணையதளம் வாயிலாக என்றால் சரிதான்.

6) இணையதளம் வாயிலாக பரிவர்த்தனை நடக்கும் போது யாரும் அதை மாற்ற முடியாது என்று சொன்னால் சரியல்ல எதிரி அவ்வாறு மாற்றியதால்தான் பிரச்சனையே. எனக்கு கொடுக்க வேண்டிய பணத்தை நிறுவனத்தில் இருந்து

அவர் எடுத்துக் கொண்டார் அதனால்தான் பிரச்சனை. அந்த நிறுவனத்திற்கு இது சம்பந்தமாக புகார் கொடுத்தேனா என்றால் புகார் கொடுத்தேன். அவர்மீது அதற்கு நடவடிக்கை எடுத்தார்களா என்றால் அவரை அந்த நிறுவனத்தில் இருந்து பணிநீக்கம் செய்துவிட்டார்கள் மேலும் தாங்கள் பணத்தை கொடுத்து விட்டதாகவும் நீங்கள் அவரிடம் வாங்கிக் கொள்ளுங்கள் என்றும் சொல்லிவிட்டார்கள்.

7) மேற்படி விபரத்தை நான் வழக்கறிஞர் அறிவிப்பிலும் புகாரிலும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. எதிரி என்னிடமிருந்து ஒரு ரூபாய் கூட நேரடியாக பணமாக வாங்கவில்லை என்றால் சரிதான். நான் நிறுவனத்தின்மீது நடவடிக்கை எதுவும் எடுத்தேனா என்றால் எடுக்கவில்லை எதிரி என்னிடம் கையாடல் செய்த பணத்தை திருப்பி கொடுப்பதாகச் சொல்லி 4 லட்சம் ரூபாய் திருப்பிக் கொடுத்தார் 8 லட்சம் ரூபாய்க்கு காசோலை கொடுத்தார் அதனால் நிறுவனத்தின்மீது நடவடிக்கை எடுக்கவில்லை.

8) எதிரி 4 லட்சம் ரூபாய் கொடுத்ததற்கு சாட்சி உள்ளதா என்றால் உள்ளது. 9.11.2023 ஆம் தேதிக்கு முன்பாக கொடுத்தார். எதிரி எனக்கு ரூபாய் 4 லட்சம் பணம் கொடுத்ததாக சொன்ன விபரத்தை நான் எனது வழக்கறிஞர் அறிவிப்பிலும் புகாரிலும் சொல்லவில்லை என்றும் இது வழக்கிற்காக நான் சொல்லும் பொய் என்றால் சரியல்ல. எனது ஓட்டலுக்கு தணிக்கை உள்ளது என்றால் சரிதான் அந்த தணிக்கையில் zomato நிறுவனம் எனது ஓட்டலுக்கு 12 லட்சம் தர வேண்டும் என்ற விபரத்தை அதில் காட்டியுள்ளேனா என்றால் இல்லை.

9) நான் சொல்வதுபோல் வரவு செலவில் குறைபாடு இருந்தால் தணிக்கையிலோ அல்லது வருமான வரி அறிக்கையிலோ அந்த விபரங்களை

காட்டியிருப்பேன் என்றும் அவ்வாறு நடக்கவில்லை என்பதால்தான் நான் காட்டவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரி எனக்கு தனிப்பட்ட முறையில் சொந்தமோ உறவோ கிடையாது என்றால் சரிதான். நான் எதிரிமீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. நான் சொல்வது மோசடி என்றும் அவ்வாறு மோசடி நடந்திருந்தால் நானோ அல்லது Zomato நிறுவனமோ எதிரிமீது நடவடிக்கை எடுக்க புகார் கொடுத்து இருப்போம் என்றும் அவ்வாறு நடைபெறவில்லை என்பதால்தான் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

10) நிறுவனம் கொடுக்க வேண்டிய பணத்தை கைமாற்று கடன்போல் பாவித்து எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். கைமாற்று கடன் ஒருவருக்கு ஒருவர் பணம் பரிமாறிக் கொள்வது என்றால் சரிதான் எதிரிதான் அந்த தொகையை கைமாற்று கடனாக கருதிக் கொள்ளச் சொன்னார். 9.11.2023ம் தேதி பத்திரம் மூலமாக எதிரி எழுதிக் கொடுத்ததாக சொல்லும் விவரத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எதிரி 4 லட்சம் ரூபாய் கொடுத்ததாக சொல்லும் விபரத்திற்கு பணப்பற்று ரசீது எதுவும் வாங்கிச் சென்றாரா என்றால் இல்லை.

11) எதிரி என்னை நம்பிக்கை மோசடி செய்துவிட்டார் என்றும் அவர் கொடுத்த காசோலை எந்த விதத்தில் பணமாகும் என நினைத்தேன் என்றால் நம்பிக்கையின் அடிப்படையில்தான். அதற்கு முன்பு எனக்கும் எதிரிக்கும் எந்த வரவு செலவும் இல்லை என்றால் சரிதான். இந்த வழக்கு காசோலைகள் அனைத்தும் எனது நிறுவனத்திற்கு எதிரி வந்தபோது அவரிடம் இருந்து எடுத்து வைத்து கையொப்பம் உட்பட அனைத்து விபரங்களும் நான் பூர்த்தி செய்து தாக்கல் செய்து கொண்டேன் என்றால் சரியல்ல.

12) கைமாற்று கடனுக்கு ஆதரவாக புரோநோட்டோ பத்திரமோ எழுதிக் கொண்டேனா என்றால் எழுதிக் கொண்டோம் 100 ரூபாய் பத்திரம் எழுதிக் கொண்டோம். அந்த பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் அது எனக்கு எதிராக சென்றுவிடும் என்பதால்தான் அதனை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ஒரு நிறுவனத்தில் பணியாற்றும் நபர் அந்த நிறுவனத்தின் ஊழியர்தான் என்றும் அந்த நிறுவனம் செய்த தவறுக்கு ஊழியர் எவ்வாறு பதிலாவார் என்றால் எதிரி என்னிடம் வந்து தனது வேலைக்கு பிரச்சனை ஏற்பட்டுவிடும் அதனால் கைமாற்று கடனாக பாவித்து மாத மாதம் காசோலையை வைத்து பணம் எடுத்துக் கொள்ளுங்கள் என சொன்னார் மனிதாபிமானத்தின் அடிப்படையில் அதனை நான் ஒப்புக் கொண்டேன்.

13) 8 லட்சம் ரூபாயை நம்பிக்கையின் அடிப்படையில் மனிதாபிமானத்தின் அடிப்படையில் கடனாக ஒப்புக் கொண்டதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. ஏன் 8 லட்சம் ரூபாய்க்கு ஒரே காசோலை வாங்காமல் எட்டு காசோலைகள் வாங்கினேன் என்றால் மாதாமாதம் எடுத்துக் கொள்ளும்படி சொல்லி அவர்தான் கொடுத்தார். நான் ஏமாற்றப்பட்டு இருந்தால் இரண்டாவது முறையாக காசோலை வாங்கி இருக்கமாட்டேன் என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்வதுபோல் எதிரி எனக்கு எந்த பணமும் தர கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல.

14) எதிரி என்னிடம் எந்த பணமும் நேரடியாக வாங்கவில்லை என்றால் சரிதான். உணவுப் பொருளுக்காக வாங்கியதுதான். உணவுப் பொருளை அவர் நேரடியாக வாங்கவில்லை என்றும் அவர் அதனை நிறுவனத்திற்காக வாங்கினார் என்றும் நிறுவனம்தான் எனக்கு பணம் தர வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

Taken down before me in Open Court, and read over to the witness and admitted by the deponent to be correct.

NALLA KANNAN M

Digitally signed by NALLA KANNAN M
Date: 2026.07.31 17:38:20 +0530

**Judicial Magistrate,**

**Bodinayakanur.**